# கல்வி அமைச்சு – தென் மாகாணம்

## தென் மாகாண சபை பாடசாலைகளில் நிலவும் சிங்களம் மற்றும் தமிழ் மொழி மூல சித்திரப் பாட ஆசிரியர் வெற்றிடங்களுக்காக பட்டதாரிகளை இலங்கை ஆசிரியர் சேவையின் 3 ம் வகுப்பின் I (அ) தரத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்தல் - 2024

தென் மாகாண சபை பாடசாலைகளில் நிலவும் சித்திரப் பாட ஆசிரியர் வெற்றிடங்களுக்காக இலங்கை ஆசிரியர் சேவையின் பிரமாணக் குறிப்பின் பிரகாரம் இலங்கை ஆசிரியர் சேவையின் 3 ம் வகுப்பு – I(அ) தரத்திற்கு சேர்த்துக்கொள்வதற்காக இவ் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள விதத்தில் தகைமைகள் கொண்டுள்ள தென் மாகாணத்தில் நிரந்தர வதிவிடம் கொண்ட பட்டதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

சிங்களம் மற்றும் தமிழ் மொழி மூல பாடங்களில் சித்திரப் பாடத்திற்க்க பிரதேச செயலகப் பிரிவு மட்டத்தில் இந்த ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படுவதுடன் நிலவும் நிதி ஏற்பாடுகள் மற்றும் வெற்றிடங்களின் அடிப்படையில் ஆட்சேர்ப்பு எண்ணிக்கை தீர்மானிக்கப்படும். முன்வரும் கலங்களில் ஆட்சேர்ப்பு தொடர்பாக கிடைக்கும் அங்கீகரங்களுக்கு ஏற்ப 2024.12.31 ஆம் திகதி வரையுள்ள வெற்றிடங்களுக்கே இப்பரீட்சை செல்லுபடியானதாகும்.

1. **சம்பள அளவு :**

   இப்பதவியின் சம்பள அளவு 2022.01.05 ஆந் திகதிய இலக்கம் 03/2016(iv) கொண்ட அரச பொது நிருவாக சுற்றறிக்கைற்கு அமைய ரூபா. 31,490 – 6x445 – 7x525 – 2x600 - ரூபா 39,035/-. (ஜீ.இ.-1-2016) ஆகும். நீங்கள் இந்த சம்பள அளவில் கட்டம் 14 இல் ரூபா 37,835/- சம்பள மட்டத்தில் அமர்த்தப்படுவீர்கள்.

2. **கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் :**

   2.1 கல்வித் தகைமைகள் :

   i. ஒரு பாடமாக சித்திரக் கலை உள்ளடங்கிய எந்தவொரு பட்டம் ஒன்று

அல்லது

க.பொ.த உயர் தரத்தில் சித்திரப்பாடத்திற்காக A சித்தி அல்லது B சித்தியுடன் ஏற்றுக் கொள்ளப்பட்ட பல்கலைக்கழகத்தினால் பட்டம் ஒன்றினை பெற்றிருத்தல் வேண்டும். (A சித்தி பெற்ற விண்ணப்பதாரிகள் போதாத பட்சத்தில் மாத்திரம் B சித்தி பெற்ற விண்ணப்பதாரிகளை ஆட்சேர்ப்பு செய்வது தொடர்பில் கவனம் செலுத்தப்படும்.)

இந்தப் பட்டம் விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதித் திகதிக்கு திகதிக்கு முன்னர் செல்லுபடியாகும் பட்டமாக இருத்தல் வேண்டும்.

மற்றும்

ii. க.பொ.த (சா/த) பரீட்சையில் இரண்டு தடவைகளுக்கு மேற்படாத தடவைகளில் தாய்மொழி மற்றும் கணிதம் உட்பட ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருப்பதுடன் அவற்றில் மூன்று பாடங்களில் திறமைச்சித்தி பெற்றிருத்தல் வேண்டும். (ஒரு தடவையில் குறைந்தபட்சம் ஐந்து (05) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்)

மற்றும்

iii. க.பொ.த (உ/த) பரீட்சையில் ஒரு தடவையில் மூன்று (03) பாடங்கள் உள்ளடங்களாக சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**மிக முக்கியம்** : (விண்ணப்பத்தினை பூரணப்படுத்தும் போது கவனத்திற் கொள்ள வேண்டும்.)

- விண்ணப்பிக்கப்பட்ட பாடம் மற்றும் மொழி மூலம் பின்னர் எக்காரணம் கொண்டும் மாற்ற இடமளிக்கப்பட மாட்டாது.
- 1988.08.18 ஆம் திகதிய 27/88 ஆம் இலக்க "அங்கவீனர்களுக்கு தொழில் வழங்கல்" எனும் அரச பொது நிர்வாக சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

2.2 உடல் மற்றும் உளத் தகுதி –

சகல விண்ணப்பதாரியும் ஆசிரியர் ஒருவராக கடமையாற்ற தகுந்த உடல் மற்றும் உள ஆரோக்கியம் கொண்டவராக இருத்தல் வேண்டும்.

2.3 வயது

விண்ணப்ப முடிவுத் திகதிக்கு 18 வயதிற்குக் குறையாமலும் 35 வயதிற்கு மேற்படாதும் இருக்க வேண்டும்.

2.4 ஏனைய தகைமைகள் –

I. விண்ணப்பதாரி இலங்கை பிரசையாக இருத்தல் வேண்டும்.
II. விண்ணப்பதாரி நற்பண்புகள் கொண்டவராக இருத்தல் வேண்டும்.
III. விண்ணப்பதாரி அல்லது வாழ்க்கைத்துணை , விண்ணப்ப முடிவுத் திகதிக்கு முந்திய 03 வருடங்களுக்கு குறையாத காலம் தென் மாகாணத்தில் நிரந்தர வசிப்பிடத்தை கொண்டவராக இருத்தல் வேண்டும். (கிராம உத்தியோகத்தரினால் வழங்கப்பட்ட வதிவுச் சான்றிதழ் (டீ.எஸ். 04) மூலம் நேர்முகப் பரீட்சையின் போது வதிவை உறுதிப்படுத்த வேண்டும்)
IV. தென் மாகாணத்தில் எந்தப் பிரதேசத்திலும் பணியாற்ற முடியுமாக இருத்தல் வேண்டும்.

3. **சேவை நிபந்தனைகள் :**

I. அரச / மாகாண சபை அரசாங்க சேவை நியமனங்களை கட்டுப்படுத்தும் பொது விதிகளுக்கும், இலங்கை ஆசிரியர் சேவை பிரமாணக் குறிப்பின் நிபந்தனைகளுக்கும், அதற்கு செய்துள்ள மற்றும் எதிர்வரும் காலங்களில் செய்யப்படும் திருத்தங்களுக்கு அமைவாக தெரிவு செய்யப்படும் பட்டதாரிகள் இலங்கை ஆசிரியர் சேவையின் 3ம் வகுப்பு – I(அ) தரத்திற்கு நியமிக்கப்படுவார்கள்.

II. இந்நியமனம் நிரந்தரமானது. ஓய்வூதியம் உரித்துடையதகும். இப் பதவிக்கு உரித்தான ஓய்வூதிய முறை தொடர்பில் அரசினால் எடுக்கப்படும் கொள்கை ரீதியான தீர்மானங்களுக்கு நியமனம் பெறுவோர் உடன்படுதல் வேண்டும்.

III. நியமனம் செய்யப்படும் ஆசிரியர்கள் 03 வருட தகுதிகாண் காலத்திற்கு உட்படுவர்.

IV. 2020.10.16 ஆம் திகதிய 18/2020 ஆம் இலக்க அரச பொது நிருவாக சுற்றறிக்கை மற்றும் அதற்கு மேற்கொள்ளும் திருத்தங்கள் பிரகாரம் விதிக்கப்பட்டுள்ளவாறு இரண்டாம் அரச கரும மொழி தொடர்பில் தேர்ச்சியை பெற்றுக் கொள்ள வேண்டும்.

4. **ஆட்சேர்ப்பு :**

4.1 ஆட்சேர்ப்பு முறை :

I. 2008.07.01 ஆம் திகதி முதல் அமுலாக்கப்பட்ட இலங்கை ஆசிரியர் சேவையின் பிரமாணக் குறிப்பின் 7.2.4 இன் பிரகாரம் ஆட்சேர்ப்பு செய்யப்படும்.

II. முன்வைக்கப்பட்டுள்ள விண்ணப்பங்களின் எண்ணிக்கை நிலவும் வெற்றிடங்களிலும் குறைவாக உள்ளபோது போட்டிப் பரீட்சை நடாத்தாது சாதாரண நேர்முகப் பரீட்சை ஒன்றும் பிரயோகப் பரீட்சை ஒன்றும் நடாத்தப்பட்டு ஆட்சேர்ப்புச் செய்வதுடன் விண்ணப்பங்கின் எண்ணிக்கை வெற்றிடங்களின் எண்ணிக்கையிலும் அதிகமாக உள்ள போது போட்டிப் பரீட்சை ஒன்றினை நடாத்தி அதன் புள்ளிகள் மற்றும் பிரயோக பரீட்சையில் பெற்றுக் கொள்ளும் மொத்தப் புள்ளிகள் அடிப்படையில் பிரதேச செயலக ரீதியாக ஆட்சேர்ப்புச் செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

III. பிரதேச செயலகப் பிரிவு அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்படுவதுடன் குறித்த பாடத்திற்கு குறித்த பிரதேச செயலகப் பிரிவில் நிரந்தர வதிவிடம் கொண்ட பட்டதாரிகள் போதிய வெற்றிடங்களை பூரணப்படுத்துவதற்கு போதிய அளவு இல்லாதபட்சத்தில் அதற்கு நெருங்கிய பிரதேச செயலகப் பிரிவில் இருந்து விண்ணப்பித்துள்ள விண்ணப்பதாரிகளில் இருந்தும் அதுவும் போதாத பட்சத்தில் நெருங்கிய பிரதேச செயலகப் பிரிவிற்கு அடுத்த படியாக

நெருங்கிய பிரதேச செயலகப் பிரிவில் இருந்தும் என்றவாறு ஆட்சேர்ப்பு செய்யப்படும்.

4.2 எழுத்து மூலப் பரீட்சை – இது இரண்டு வினாப்பத்திரங்களைக் கொண்டது.

| பாடங்கள் | உயர்ந்த பட்ச புள்ளி அளவு | சித்தியடைவதற்கு தேவையான குறைந்த பட்ச புள்ளி அளவு |
|---|---|---|
| நுண்ணறிவுப் பரீட்சை (நேரம் 01 மணித்தியாலம்) | 100 | 40 |
| பொது அறிவு (நேரம் 01 மணித்தியாலம்) | 100` | 40 |

**பாடத்திட்டம் :**

பாட இலக்கம் 01 - நுண்ணறிவுப் பரீட்சை

பரீட்சார்த்தியிடம் ஆசிரியர் தொழிலுக்காக காணப்படும் திறமைகள் தர்க்க ரீதியிலான அறிவு தொடர்பில் மதிப்பீடு செய்யும் நோக்குடன் இவ் வினாத்தாள் தயாரிக்கப்படும். இது பல்தேர்வு மற்றும் சுருக்கமாக விடையளிக்க கூடிய வினாக்கள் 50 ஐக் கொண்டதாகும் . இதில் சகல வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும்.

பாட இலக்கம் 02 - பொது அறிவு

தாம் விண்ணப்பிக்கும் ஆசிரியர் துறைக்குரிய அத்துறை தொடர்பாக காணப்படும் பொது அறிவு மற்றும் / அல்லது உள்நாட்டு ரீதியில் ஏற்பட்டுள்ள மற்றும் ஏற்படக் கூடிய கல்வி முன்னேற்றங்கள் தொடர்பான பொது அறிவு மற்றும் கல்வி நவீனமயப்படுத்தல் செயற்பாடுகள் தொடர்பான பொது அறிவினை பரிசீலனை செய்யக்கூடிய பல்தேர்வு மற்றும் சுருக்கமாக விடையளிக்கக் கூடிய வினாத்தாள்களாகும். இதில் சகல வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும்.

4.3 பரீட்சை ஒழுங்கு விதிமுறைகள் :

(i) இப்பரீட்சை சிங்களம் மற்றும் தமிழ் மொழி மூலம் நடாத்தப்படும்.
(ii) சகல பரீட்சார்த்திகளும் இப்பரீட்சையின் சகல வினாத்தாள்களுக்கும் தோற்ற வேண்டியது ஒரு மொழி மூலம் மாத்திரமாகும். இம் மொழி தாம் நியமனம் பெறவுள்ள மொழி மூலமாக இருக்க வேண்டும்.
(iii) பரீட்சார்த்தி தமது விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மொழி மூலத்தை மாற்றியமைப்பதற்கு அனுமதி வழங்கப்பட மாட்டாது.
(iv) சகல பரீட்சார்த்திகளும் 02 வினாத்தாள்களுக்கும் தோற்ற வேண்டும்.
(v) ஒரு தடவையில் சேர்த்துக் கொள்ளப்படும் எண்ணிக்கை நியமனப் பொறுப்பாளரினால் தீர்மானிக்கப்படும்.

4.4 சாதாரண நேர்முகப் பரீட்சை –

சேவை பிரமாணக் குறிப்பு மற்றும் தொடர்புடையதாக பிரசுரிக்கப்படும் வர்த்தமானி அறிவித்தலில் அல்லது பத்திரிகை அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகுதிகளை கொண்டுள்ளாரா என்பதை பரீட்சித்தல் மற்றும் உடல் தகுதிகளை பரீட்சித்தல்.

4.5 பிரயோகப் பரீட்சை –

பிரயோகப் பரீட்சையாக விண்ணப்பதாரியினால் இனங்காணப்பட்ட தலைப்பின் கீழ் சமர்பிப்புக்களை மேற்கொள்ளப்பட வேண்டும். இதற்காக கீழ் குறிப்பிடப்பட்டவாறு புள்ளிகள் வழங்கப்படும்.

| தொடர் இல. | பிரயோகப் பரீட்சையில் புள்ளி வழங்கப்படும் நியதிகள் | உயர்ந்த பட்ச புள்ளி அளவு | சித்தியடைவதற்கு தேவையான புள்ளி அளவு |
|---|---|---|---|
| 01 | நோக்கமும் பிரவேசமும் | 05 | 02 |
| 02 | ஆளுமை மற்றும் குரல் வளம் | 05 | 02 |
| 03 | தொடர்பாடலில் | 05 | 02 |

| | | | |
|---|---|---|---|
| | தெளிவு | | |
| 04 | நேர முகாமைத்துவம் | 05 | 02 |
| 05 | சமர்பிப்புத் திறமைகள் | 05 | 02 |
| **மொத்தப் புள்ளிகள்** | | **25** | **10** |

4.6 பிரயோகப் பரீட்சை முறைகள் –

I. பிரயோகப் பரீட்சைக்காக 05 நிமிடங்களுக்கு குறையாத காலம் வழங்கப்படும்.
II. பிரயோக பரீட்சையில் பெற்றுக் கொள்ளக்கூடிய உயர்ந்த பட்ச புள்ளிகளின் அளவு 25 ஆகும்.
III. பிரயோகப் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவ்வவ் நியதிகளுக்காக குறைந்த பட்சம் 02 புள்ளிகள் வீதம் பெற்றுக் கொள்ள வேண்டும்.
IV. பிரயோக பரீட்சை மதிப்பீடுகள் தென் மாகாண கல்வி அமைச்சினால் நியமிக்கப்படும் நேர்முகப் பரீட்சை குழுவினால் மேற்கொள்ளப்படும்.

4.7 நியதிகளின் நோக்கம் –

I. நோக்கமும் பிரவேசமும்
வெற்றிகரமாக பாடத்தின் நோக்கத்தை தெளிவுபடுத்தல் மற்றும் பாட பிரவேச இயலுமையினை மதிப்பீடு செய்தல்.

II. ஆளுமை மற்றும் குரல் வளம்
ஆசிரியராக சிறந்த ஆளுமை கொண்ட மற்றும் கற்பிப்பதற்கு சிறந்த குரல் வளப்பிரயோகத்தினை மதிப்பீடு செய்தல்

III. தொடர்பாடலில் தெளிவு
கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளில் உரிய விடயங்களை பயன்மிக்கதாக தெரிவிக்கக்கூடிய இயலுமையினை மதிப்பீடு செய்தல்.

IV. நேர முகாமைத்துவம்

பெற்றுக் கொள்ளப்படும் கால எல்லைக்குள் நோக்கத்தை எட்டக்கூடிய திறமைகளை மதிப்பீடு செய்தல்.

V. சமர்பிப்புத் திறமைகள்
நோக்கத்தை எட்டுவதற்கான சமர்பிப்புக்கள் கலைசார் முறைகளை சிறந்த முறையில் பயன்படுத்துவதற்கான இயலுமைகளை மதிப்பீடு செய்தல்.

5. பரீட்சைக் கட்டணம் :

நேர்முகப்பரீட்சையின் போது அரவிடப்படும்.

6. விண்ணப்பிக்கும் முறை –

I. சகல விண்ணப்பதாரிகளும் www.edumin.sp.gov.lk எனும் எமது இணையதளத்திற்கு பிரவேசித்து உரிய தகவல்களை வழங்கி நிகழ்நிலை (Online) மூலம் விண்ணப்பத்தினை பூர்த்தி செய்ய வேண்டும். விண்ணப்பத்தினை பூர்த்தி செய்யும் போது உப அட்டவணை 01 இனை பயன்படுத்த வேண்டும்.

II. ஒரு விண்ணப்பதாரிக்கு ஒரு விண்ணப்பம் மாத்திரமே விண்ணப்பிக்க முடியும்.

III. நிகழ்நிலை (Online) மூலம் விண்ணப்பத்தினை அனுப்பும் இறுதித் திகதி 2024.07.12 ஆகும்.

7. தாமதமாகக் கிடைக்கும் விண்ணப்பங்கள் எக்காரணம் கொண்டும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

8. இப் பரீட்சையை பிற்போடுதல், இரத்துச் செய்தல் அல்லது நடாத்திய பின் தெரிவு செய்தல்/ செய்யாதிருத்தல் அல்லது வெற்றிடங்களின் எண்ணிக்கை பற்றிய இறுதித் தீர்மானம் மற்றும் இவ்வறிவித்தலில் உட்படாத ஏதாவது மற்ற விடயங்கள் இருப்பின் அது தொடர்பாக தீர்மானம் எடுக்கும் உரிமையும் தென் மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் அனுமதியில் மேற்கொள்ளப்படும்.

9. விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றமை பற்றி அறிவிக்கப்படுவதில்லை.

10. இவ் அறிவித்தலில் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் மொழிப் பிரயோகத்தில் ஏதேனும் ஒரு பொருத்தப்பாடின்மை ஏற்படின் சிங்களம் மூலமான மொழிப் பிரயோகம் ஏற்புடையதாகும்.

## உப அட்டவணை 01

## விண்ணப்பதாரிகள் தெரிவு செய்ய வேண்டிய பிரதேச செயலகப் பிரிவுகள்

| **தொடர் இலக்கம்** | **பிரதேச செயலகப் பிரிவு** |
|---|---|
| 101 | அக்மீமன |
| 102 | அம்பலாங்கொடை |
| 103 | பத்தேகம |
| 104 | பலபிட்டி |
| 105 | பெந்தோட்டை |
| 106 | போப்பே போத்தல |
| 107 | எல்பிட்டி |
| 108 | காலி |
| 109 | கோனபின்னுவல |
| 110 | ஹபராதுவ |
| 111 | ஹிக்கடுவ |
| 112 | இமதுவ |
| 113 | கரந்தெனிய |
| 114 | நாகொட |
| 115 | நெலுவ |
| 116 | நியாகம |
| 117 | தவலம |
| 118 | வெலிவிட்டிய திவிதுர |
| 119 | யக்கலமுல்ல |
| 120 | வந்துரம்ப |
| 121 | ரஜ்கம |
| 122 | மாதம்பாகம |

| | |
|---|---|
| 123 | அக்குரஸ்ஸ |
| 124 | அத்துரலிய |
| 125 | தெவிநுவர |
| 126 | திக்வல்ல |
| 127 | ஹக்மன |
| 128 | கம்புறுபிட்டிய |
| 129 | கிரிந்தை புகுல்வெல்ல |
| 130 | கொடபொல |
| 131 | மாலிம்பட |
| 132 | மாத்தறை |
| 133 | முலட்டியான |
| 134 | பஸ்கொட |
| 135 | பிட்டபத்தற |
| 136 | திஹகொட |
| 137 | வெலிகம |
| 138 | வெலிபிடிய |
| 139 | அம்பலாந்தோட்டை |
| 140 | அங்குனகொலபெலஸ்ஸ |
| 141 | பெலியத்த |
| 142 | அம்பாந்தோட்ட |
| 143 | கட்டுவன |
| 144 | லுனுகம்வெகர |
| 145 | ஒக்வெல |
| 146 | சூரியவெவ |
| 147 | தங்கல்ல |
| 148 | திஸ்ஸமகாராம |
| 149 | வலஸ்முல்ல |
| 150 | வீரகெட்டிய |